Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JULY 24 2025

செவ்வாய்க்கிழமை 24, ஜூன் 2025 | ஒளி: 10 கதிர் 268 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



# “எரிபொருள் பற்றாக்குறை இருக்காது”

எதிர்காலத்தில் எரிபொருள் விலையில் பெரிய அதிகரிப்பு அல்லது எரிபொருள் பற்றாக்குறை இருக்காது என்று இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் கலாநிதி மயூரா நெத்திகுமாரகே திங்கட்கிழமை (23) அன்று தெரிவித்தார்.

இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்திடம் இரண்டு மாதங்களுக்கு போதுமான எரிபொருள் இருப்பு உள்ளது. ஆகஸ்ட் வரை எரிபொருளை முன்பதிவு செய்துள்ளது. டிசம்பர் இறுதி வரை எரிபொருள் விமலைமனு கோரல் செய்யத் தயாராக உள்ளது என்று பொது முகாமையாளர் கூறினார்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் இராணுவ நிலைமை மோசமடைந்தால், அது முழு உலகிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கூறிய நெத்திகுமாரகே, இலங்கை அதிலிருந்து தப்பிக்க முடியாது என்றும், இராணுவ நிலைமை தணிந்தால், அது ஒரு பிரச்சினையாக இருக்காது என்றும் கூறினார்.

தற்போதைய சூழ்நிலையில், மக்கள் தேவையற்ற அச்சத்தை உருவாக்கக்கூடாது என்றும், தற்போதைய அரசாங்கம் உலகப் போக்குகளுக்கு ஏற்ப செயல்படத் தயாராக உள்ளது என்றும் அவர் கூறினார்.

விலைச் சூத்திரத்தின்படி முந்தைய மாத விலையின் அடிப்படையில் எரிபொருளின் விலை நிர்ணயிக்கப்படுவதால், வரும் நாட்களில் எரிபொருள் விலையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட வாய்ப்பில்லை என்றாலும், எரிபொருள் விலைகள் ஒன்று அல்லது இரண்டு ரூபாய் அதிகரிப்பது இயல்பானது என்று நெத்திகுமாரகே மேலும் கூறினார்.

# “போர் தீர்வாகாது”

## போப் லியோ வலியுறுத்தல்



“மத்திய கிழக்கில் இருந்து, குறிப்பாக ஈரானிலிருந்து தொடர்ந்து கவலையளிக்கும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. முன் எப்போதையும் விட, மனிதகுலம் அமைதிக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இது பொறுப்புணர்வும் பகுத்தறிவும் தேவைப்படும் ஒரு கூக்குரல். மேலும், இது ஆயுதங்களின் இரைச்சல் அல்லது மோதலைத் தூண்டும் சொற்பொழிவுகளால் மூழ்கடிக்கப்படக் கூடாது என தெரிவித்துள்ள போப் லியோ, போர் மூலம் எந்த பிரச்சினையையும் தீர்க்க முடியாது என்றார்.

இது குறித்து போப் லியோ கூறியதாக வத்திக்கான் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதுமான மனிதாபிமான உதவிக்கான தேவை இன்னும் அவசரமாகி வரும் நிலையில், குறிப்பாக, காசா மற்றும் பிற பிரதேசங்களில் மக்களின் அன்றாட துன்பங்கள் மறக்கப்படும் அபாயம் உள்ளது. சர்வதேச சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் போரின் துயரத்தைத் தடுக்கும் தார்மிகப் பொறுப்பைக் கொண்டுள்ளனர். மனித கண்ணியம் ஆபத்தில் இருக்கும்போது அதைவிடப் பெரிய பிரச்சினை எதுவும் இருக்க முடியாது. போர் மூலம் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது. மாறாக, அது அவற்றைப் பெரிதாக்கி மக்களின் வரலாற்றில் ஆழமான காயங்களை ஏற்படுத்துகிறது. எந்த இராணுவ வெற்றியும் ஒரு தாயின் வலியையோ, ஒரு குழந்தையின் பயத்தையோ அல்லது திருடப்பட்ட எதிர்காலத்தையோ ஒருபோதும் ஈடுசெய்ய முடியாது. வன்முறை மற்றும் ரத்த மோதல்கள் மூலம் அல்லாமல், அமைதி மூலம் நாடுகள் தங்கள் எதிர்காலத்தை வடிவமைக்கட்டும்” என்று அதில் கூறப்பட்டுள்ளது.



# ‘அணையா தீபம்’ ஏற்றப்பட்டது

■ பு.கஜிந்தன்

செம்மணி மண்ணில் புதையுண்டு போன உறவுகளுக்கு, நீதி வேண்டியே”அணையா தீபம்” என்ற பெயரில் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

தமிழ் மக்கள் பலரது உடலங்களைத் தாங்கிய மனிதப் புதைகுழிகள் தமிழர் தாயகமெங்கும் அதிகரித்துச் செல்கின்ற நிலையில், தீர்வுகள் எதுவும் இதுவரை கிடைக்காத நிலையில் குறித்த விடயத்தைச் சர்வதேச பார்வைக்குக் கொண்டு செல்வதோடு அதனூடாக உறவுகளுக்கு நீதி கிடைக்க வலியுறுத்தும் வகையில் மக்கள் இந்த ‘அணையா தீபம்’ போராட்டத்தைத் திங்கட்கிழமை(23) அன்று செம்மணியில் 1996களில் சருகாகிப் போன கிருசாந்தியின் உறவினரால் சுடரேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. மக்கள் செயல் அமைப்பின் ஏற்பாட்டில் சட்டத்தரணி வைஷ்ணவி சண்முகநாதன் தலைமையில்,முன்னெடுக்கப்பட்ட இந்த போராட்டத்தில் சமயத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

திங்கட்கிழமை (23) அன்று காலை 10.10 மணி அளவில் ஆரம்பிக்கப்பட இந்த போராட்டமானது, 25ஆம் திகதி வரை 3 நாட்களுக்கு அகிம்சை வழியில் முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ். வருகை தரவுள்ள ஐ.நா. உயர் அதிகாரியின் பார்வைக்குப் பிரச்சினையின் ஆழத்தை வலியுறுத்துவதற்காக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.



# நிதியமைச்சுக்கு செயலாளர் நியமனம்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, நிதி அமைச்சின் புதிய செயலாளராக கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமவை நியமித்துள்ளார்.

இது தொடர்பான நியமனக் கடிதம், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமவிடம் திங்கட்கிழமை (23) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

நிதி அமைச்சின் கீழ் உள்ள இலங்கைப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளராக பல வருடங்களாக மூலதனச் சந்தையை ஒழுங்குபடுத்துவதில் பங்களித்த சூரியப்பெரும, உலக வங்கியின் இலகுவில் வணிகமயமாக்கல் குறித்த, சர்வதேச தரவரிசைப்படி, சிறிய அளவிலான முதலீட்டாளர்களின் பாதுகாப்பு தொடர்பில் தரவரிசையை 74 ஆவது இடத்திலிருந்து 28 ஆவது இடத்திற்கு உயர்த்துவதற்கும் பங்களித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# களுவன்கேணி விபத்தில் இருவர் பலி; பெண் காயம்

■ கனகராசா சரவணன், பேரின்பராஜா சபேஷ்



மட்டக்களப்பு - களுவன்கேணி பிரதேசத்தில் இடம்பெற்ற கார் விபத்தில் இரண்டு பேர் ஸ்தலத்தில் பலியாகியுள்ளனர். பெண்ணொருவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதிக வேகமாகச் சென்றுகொண்டிருந்த காரின் டயர் வெடித்ததையடுத்து இவ்விபத்து இடம்பெற்றிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

திங்கட்கிழமை (23) அதிகாலை 3.15 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு சின்னஊறணியைச் சேர்ந்த காரின் சாரதியான 25 வயதுடைய ஜெயந்திர குமார் சஞ்சே மற்றும் மட்டக்களப்பு கருவப்பங்கேணியைச் சேர்ந்த சிசிலியா பாடசாலை மாணவியான 15 வயதுடைய பிரதீபன் தமன்லினி ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இவரது தாய் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். காரின் சாரதியும் முன்ஆசனத்திலிருந்த சிறுமியும் மரணமடைந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# சஜின் டி வாஸுக்கு பிடிவிறாந்து



சுமார் 3.69 மில்லியன் ரூபாய் வருமான வரி செலுத்தாததற்கு எதிராக உள்நாட்டு வருவாய் ஆணையர் தாக்கல் செய்த வழக்கில் ஆஜராகத் தவறிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் டி வாஸ் குணவர்தனவை கைது செய்து ஆஜர்படுத்த கொழும்பு நீதவான் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை (23) பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது.

கடந்த 2010 - 2012ஆம் ஆண்டுகளுக்குட்பட்ட காலப்பகுதிகளில் அரசாங்கத்துக்கு சுமார் 369 இலட்சம் ரூபாய் வருமான வரி செலுத்தவில்லை என கூறி,

தொடர்ச்சி P2



# சிறை அதிகாரிகளுடன் நீதி அமைச்சர் சந்திப்பு

நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, திங்கட்கிழமை (23) அன்று சிறைச்சாலை ஆணையர்கள் மற்றும் நாடு முழுவதும் உள்ள அனைத்து சிறைச்சாலை கண்காணிப்பாளர்களுடன் நீதி அமைச்சில் சிறப்பு கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

குறிப்பாக களுத்துறை மற்றும் மட்டக்களப்பு சிறைச்சாலைகளில் நெரிசல், மாற்று இடங்களில் வசதிகளை மேம்படுத்த வேண்டிய அவசியம் மற்றும் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கும் செயல்முறை உள்ளிட்ட சிறைச்சாலை அமைப்பு எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகள் குறித்து இந்தக் கூட்டம் கவனம் செலுத்தியது. சிறைச்சாலைகள் தொடர்பாக சமூக ஊடகங்களில் தவறான தகவல்கள் பரவுவதும், கைதிகளால் தயாரிக்கப்பட்ட பொருட்களை ஊக்குவிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், அமைச்சின் செயலாளர், ஜனாதிபதி சட்டத்தரணி ஆயிஷா ஜினதாச, சிறைச்சாலைகள் பதில் ஆணையர் நாயகம் நிஷான் தனசிங்க, அமைச்சின் மூத்த அதிகாரிகள் மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் அனைத்து சிறைச்சாலை கண்காணிப்பாளர்களும் கலந்து கொண்டனர்.



# நைஜீரியாவில் இருந்து எரிபொருள் இறக்குமதி

மத்திய கிழக்கில் பதற்றம் அதிகரித்து வருவதாலும், எரிபொருள் விநியோகச் சங்கிலியில் மேலும் சீர்குலைவு ஏற்படும் என்ற கவலைகளாலும், நைஜீரியாவிலிருந்து பெட்ரோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய இலங்கை முடிவு செய்துள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஈரான்–இஸ்ரேல் மோதல்:

# “தேசிய பாதுகாப்புப் பேரவையைக் கூட்டவும்”

ஈரான்-இஸ்ரேல் மோதலினால் நமது நாட்டிற்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் தேசியப் பாதுகாப்புப் பேரவையை உடனடியாக கூட்டி, ஆராயந்து தீர்வுகளை பெற்றுத் தாருங்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசாங்கத்திடம் திங்கட்கிழமை (23) அன்று கோரிக்கை விடுத்தார்.

பாரசீக வளைகுடாவை அரேபியக் கடலுடன் இணைக்கும் ஹார்முஸ் ஜலசந்தி மூடப்படும் போது, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு (LNG) கேஸ் துறைகளில் பெரும் பிரச்சினை எழும் என்றும் சுட்டிக்காட்டினார்.

ஈரானிய பாராளுமன்றத்தின் தீர்மானத்தின் பிரகாரம், ஹார்முஸ் ஜலசந்தியை மூடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கிறது. ஒட்டுமொத்த சர்வதசே எண்ணெய் வர்த்தக விநியோகத்தில் 20-30% க்கு இடையிலும், சர்வதேச இயற்கை எரிவாயு விநியோகத்தில் 1/3 க்கும் அதிகமானவை இந்த ஜலசந்தி நீர் வழித்தடம் ஊடாக செல்வதால், எண்ணெய் மற்றும் எரிவாயு விலைகளில் கடுமையான அதிகரிப்பு ஏற்படும் என பல தரப்பினரும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். ஒரு நாடாக நாம் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காமல், தேசியப் பாதுகாப்பு பேரவைக் கூட்டத்தைக் கூட்டி, எழுந்துள்ள இந்த பிரச்சினைக்குத் தீர்வுகளைக் காண வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# நிதியமைச்சுக்கு...

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தில் வணிக நிர்வாகம் தொடர்பில் MBA பட்டத்தையும் பெற்றுள்ள அவர், மலேசியாவின் முகாமைத்துவம் மற்றும் விஞ்ஞான பல்கலைக்கழகத்தில் (Management and Science University) கலாநிதி பட்டத்தையும் பெற்றுள்ளார். அவர் ஐக்கிய இராச்சியத்தின், பட்டய கணக்காளர் முகாமைத்துவ நிறுவனம் (CIMA) மற்றும் பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கத்தின் (ACCA) உறுப்பினரும் ஆவார்.

அவர், பணமோசடி தடுப்பு செயலணியின் உறுப்பினராக மூலதனச் சந்தையைப் பிரதிநிதித்துவப்படுத்தி செயற்பட்டுள்ளதுடன், சிறிய மற்றும் மத்தியதர தொழில் முயற்சிகளைப் பட்டியலிடுவதற்கான கொள்கைகள் உட்பட, நிதித்துறையில் தற்போதுள்ள கொள்கைகளை உருவாக்குவதற்கும் அவர் பங்களித்துள்ளார். மேலும், தனியார்த் துறையின் உயர்மட்ட நிறுவனங்களின் பிரதான நிறைவேற்று அதிகாரி பதவி உட்பட பல முக்கிய பதவிகளையும் வகித்துள்ளார்.

கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும இதற்கு முன்னர் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சராகவும் கடமையாற்றினார். நிதியமைச்சர் செயலாளர் மஹிந்த சிறிவர்தன இராஜினாமா செய்ததை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு டாக்டர் ஹர்ஷன சூரியப்பெரும நியமிக்கப்பட்டுள்ளார்.

# சஜின் டி வாஸுக்கு பிடிவிறாந்து

சஜின் டி வாஸ் குணவர்தனவுக்கு எதிராக உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

சஜின் டி வாஸ் குணவர்தன இந்த வழக்கு மீதான விசாரணைகளுக்காக நீதிமன்றில் ஆஜராகாமல் இருந்துள்ளார்.

இந்த நிலையில், நீதவான் சஜின் டி வாஸ் குணவர்தனவை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு பிடிவிறாந்து பிறப்பித்துள்ளார்.

# "தேசிய பாதுகாப்புப்...

இந்த ஹார்முஸ் ஜலசந்தி மூடப்படும் பட்சத்தில் எரிசக்தித் துறையில் ஏற்படும் பாதிப்பை நிவர்த்தி செய்ய மாற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்தியா, ரஷ்யா ஆகிய நாடுகள் இறக்குமதி செய்யும் எண்ணெய்யின் அளவை தற்போது அதிகரித்துள்ளன. நாடாக நாமும் இது குறித்து ஆராய்ந்து இதன்பால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அவ்வாறே, மத்திய கிழக்கில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன்கள் குறித்து ஆராய்ந்து, அவர்களினது வாழ்க்கைப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது எழுந்துள்ள சூழ்நிலைக்கு மத்தியில் ஏதேனும் தொழில் இழப்புகள் ஏற்பட்டால், அது நாட்டை கடுமையாகப் பாதிக்கும். எனவே, இந்த விடயம் உள்ளிட்ட பன்முக நோக்கிலான முன்னாயத்த ஆராய்வை நடத்துமாறு கோரிக்கை விடுத்தார். .

மேலும், சுற்றுலாத் துறை பொருளாதார வளர்ச்சி, பணவீக்கம், உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டுக் கையிருப்பு ஆகியவற்றிலும் இது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இத்தகைய சூழ்நிலையில், தற்போதைய அரசாங்கம் நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்பை நல்கி வரும் தொழிற்துறை, விவசாயம் மற்றும் சேவைகள் துறை உட்பட ஒட்டுமொத்த துறைகளிலும் ஏற்படும் தீங்கு விளைவிக்கும் தாக்கத்தைக் கையாள்வதற்கு ஏற்ற தேசிய வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும். சகல தரப்பினருடனும் கலந்துரையாடி தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வை காண வேண்டும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

அவசர பொருளாதார வேலைத்திட்டத்தின் தேவை நமக்கு காணப்படுகிறது. இதனை விரைந்து செயல்படுத்தப்பட வேண்டும். இந்த பொருளாதார வேலைத்திட்டத்தை முன்னெடுக்கச் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாட வேண்டும். இருதரப்பு மற்றும் பலதரப்பு உறவுகளை வளர்த்துக் கொண்டு, சர்வதேச சமூகத்துடன் இணைந்து நமது நாடு எதிர்கொள்ள காத்திருக்கும் சவால்களுக்குத் தீர்வுகளை வழங்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நிலைமை நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் என்பதால், நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் மூலோபாய ரீதியாக பேச்சுவார்த்தைகளை நடத்தி, தளர்வான அணுகுமுறையை நோக்கி நகர வேண்டும். உலகளாவிய தெற்கு எமது நாட்டிற்குத் தலைமைத்துவத்தை வழங்குவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாகும். சார்க் அமைப்பு உள்ளிட்ட உலகளாவிய அமைப்புகளில் கவனம் செலுத்தி, உலகளாவிய தெற்கில் நாம் எதிர்கொள்ளும் சவால்களை உலகின் கவனத்துக்கு கொண்டு சென்று, தற்போதைய மோதல் உக்கிரத்தைக் குறைப்பதற்கும், மோதல் நிலைமையைக் குறைப்பதற்கும் இராஜதந்திர ரீதியாக எடுக்க முடியுமான சகல தலையீடுகளையும் எடுக்குமாறும், தேசியப் பாதுகாப்பு பேரவையின் அவசரக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்து, இந்த உலகளாவிய நிலைமை குறித்து கலந்துரையாடுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

# அமெரிக்க எச்சரிக்கை

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான மோதல் தீவிரமடைந்து வருவதைத் தொடர்ந்து மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் ஸ்திரமின்மை காரணமாக, வெளிநாடுகளில் உள்ள அமெரிக்கக் குடிமக்கள் அதிக எச்சரிக்கையுடன், இருக்குமாறு அமெரிக்க வெளியுறவுத்துறை ஞாயிற்றுக்கிழமை(22) உலகளாவிய எச்சரிக்கை பாதுகாப்பு எச்சரிக்கையை வெளியிட்டது.

தனது வலைத்தளத்தில் வெளியிட்ட அறிக்கையில், வெளியுறவுத்துறை, "இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான மோதலால் மத்திய கிழக்கு முழுவதும் பயணங்களுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது மற்றும் அவ்வப்போது வான்வெளி மூடப்பட்டுள்ளது.

அமெரிக்க குடிமக்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள நலன்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

"உலகெங்கிலும் உள்ள அமெரிக்க குடிமக்கள் அதிக எச்சரிக்கையுடன் இருக்குமாறு வெளியுறவுத்துறை அறிவுறுத்துகிறது.

பயணத்தைத் திட்டமிடும்போது எங்கள் பயண ஆலோசனை, நாட்டுத் தகவல் மற்றும் சமீபத்திய பாதுகாப்பு எச்சரிக்கைகளைக் கவனமாகப் படியுங்கள் என்றும் குறிப்பிட்டுள்ளது.

# கொழும்பில் விபத்தில் ஒரு வயது குழந்தை பலி

கொழும்பில் கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (22) பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் பெண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளதாக கொட்டாஞ்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

செலுத்துனரின் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று பார ஊர்தியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் குழந்தை ஒன்று படுகாயமடைந்துள்ள நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு 13 பகுதியைச் சேர்ந்த ஒரு வயதுடைய பெண் குழந்தையே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொட்டாஞ்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மயிலிட்டியில் மூன்றாவது நாளாகவும் ஆர்ப்பாட்டம்





காணி விடுவிப்பை வலியுறுத்தி மயிலிட்டியில் திங்கட்கிழமை(23) அன்று மூன்றாவது நாளாகத் தொடர் போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர். மயிலிட்டி சந்தியில் சனிக்கிழமை (21) இந்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு மக்கள் தமது காணிகளை அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் 500க்கும் மேற்பட்ட மக்கள் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# களுவன்கேணி விபத்தில் இருவர் பலி; பெண் காயம்

இவர்கள் அமிர்தகழி கோயிலுக்குச் சென்ற பின்னர் களுவன்கேணியிலுள்ள தமது பன்றி வளர்ப்புப் பண்ணை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, காரின் டயர் வெடித்ததையடுத்து, அந்த கார் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் வலது பக்கத்திற்குச் சென்று அங்கிருந்த கொங்கிறீட் வேலிக்கட்டைகளை உடைத்துக்கொண்டு பெரிய மரமொன்றில் மோதியுள்ளது. இதனால் காரிலிருந்தவர்கள் வெளியே வீசப்பட்டிருந்தனர்.

கார் முழுமையாகச் சேதமடைந்துள்ளது. இவர்கள் ஆசனப்பட்டியை அணிந்திருந்தால் உயிரிழப்பைத் தவிர்த்திருக்கலாமென பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் திடீர் மரணவிசாரணை அதிகாரி எம். எஸ்.எம். நசிர் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டார். ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் உடனடியாக சடலங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அதையடுத்து சடலங்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு பிரேதப் பரிசோதனையின் பின்னர் நல்லடக்கத்திற்காக குடும்ப உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவித்த

ஏறாவூர்ப் பொலிஸார் இச்சம்பவம் குறித்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நைஜீரியாவில் இருந்து எரிபொருள் இறக்குமதி

2025 ஜூன் 20, அன்று முடிவடைந்த காலகட்டத்தில், இஸ்ரேல்-ஈரான் பதட்டங்கள் அதிகரித்து வருவதால், விநியோகத்தில் ஏற்படும் இடையூறுகள் குறித்த கவலைகள் காரணமாக கச்சா எண்ணெய் விலைகள் உயர்ந்துள்ளன.

இருப்பினும், மோதலில் அமெரிக்கா ஈடுபடுவது குறித்து கலவையான சமிக்ஞைகள் காரணமாக முதலீட்டாளர்கள் எச்சரிக்கையாக இருந்ததால், லாபங்கள் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டன. ஒட்டுமொத்தமாக, பிரெண்ட் மற்றும் WTI கச்சா எண்ணெய் விலைகள் முறையே பீப்பாய்க்கு US$1.99 மற்றும் US$1.91 அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி கடந்த வெள்ளிக்கிழமை (20) தனது வாராந்திர பொருளாதார புதுப்பிப்பில் தெரிவித்துள்ளது.

இருப்பினும், மோதலில் அமெரிக்காவின் ஈடுபாடு காரணமாக எரிபொருள் விநியோகத்தில் புதிய நிச்சயமற்ற தன்மை உருவாகியுள்ளது.

நிலைமை குறித்து கருத்து தெரிவித்த இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் (CPC) தலைவர் டி.ஏ.ராஜகருணா, நைஜீரியா மற்றும் வேறு சில எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளிலிருந்து மாதிரிப் பொருட்களைப் பெற்று, உள்ளூர் ஆய்வகங்களில் நம்பகத்தன்மைக்காகச் சோதிக்குமாறு தனது அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியதாகத் தெரிவித்துள்ளார்.

பாரம்பரிய விநியோகச் சங்கிலியில் ஏற்படும் இடையூறுகளிலிருந்து இலங்கைக்கு ஏற்படும் எந்தவொரு தாக்கத்தையும் தடுக்கும் முயற்சியாக இந்த நடவடிக்கை இருக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

எரிபொருள் விநியோகத்தில் CPC கிட்டத்தட்ட 60 சதவீதத்தைக் கொண்டுள்ளது. மீதமுள்ளதை சினோபெக், லங்கா இந்தியன் ஆயில் கம்பெனி (LIOC) மற்றும் RM பார்க்ஸ் ஆகியவை பங்களிக்கின்றன என்று அவர் கூறினார்.

உள்ளூர் சந்தையில் உடனடி தாக்கம் எதுவும் ஏற்படாது என்று கூறிய அவர், தற்போதைய உலகளாவிய சீர்குலைவின் விளைவு இந்த ஆண்டு ஒகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதத்திற்குள் உணரப்படும் என்றார்.

ஆபிரிக்கக் கண்டத்தில் எண்ணெய் உற்பத்தி செய்யும் முக்கிய நாடு நைஜீரியா ஆகும்.

இதற்கிடையில், ரஷ்யா இலங்கையுடன் எண்ணெய் வர்த்தகத்தை வழங்க முன்வந்துள்ளது. இருப்பினும், பொருளாதாரத் தடைகள் மற்றும் அரசியல் பிரச்சினைகள் காரணமாக ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்குவதை ராஜகருணா நிராகரித்தார். இருப்பினும், இலங்கை கொள்கையளவில் அதற்கு உடன்படுகிறது.

வெளிநாடுகளுக்கு முதன்முறையாக வேலைக்கு செல்வோருக்கு

# ஜூலை முதல் புதிய விதி

இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு முதன்முறையாக வேலைவாய்ப்புக்காக செல்வோர், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்வதற்கு முன்னர், அந்தந்த நாட்டில் உள்ள இலங்கை இராஜதந்திர தூதரகத்திடமிருந்து தமது வேலைவாய்ப்பு ஒப்பந்தங்களின் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விதிகள் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் அமுல்ப்படுத்தப்படவுள்ளதாகவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது. சவூதி அரேபியா,குவைத், பஹ்ரைன், கத்தார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஓமான், இஸ்ரேல், ஜோர்டான், லெபனான், மாலத்தீவு, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளுக்கு தொழிலுக்காக செல்வோர் அவசியம் தமது வேலைவாய்ப்பு ஒப்பந்தங்களின் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என பணியகம் அறிவுறுத்தியுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கை தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் சட்ட உரிமைகளை வலுப்படுத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.

மேலும், தொழிலுக்காக புறப்படுவதற்கு முன்னர் ஒப்பந்த வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை உறுதி செய்வதும் இதன் நோக்கம் என்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தொழில்முறை பிரிவுகளில் சுயதொழில் செய்வதற்காக பயணிக்கும் நபர்களுக்கு இந்த நடைமுறை பொருந்தாது.

அத்தகைய நபர்கள் தங்கள் தொழிலைக் குறிக்கும் கடவுச்சீட்டை அல்லது செல்லவுள்ள நாட்டில் அவர்களின் தொழில்முறை நிலையை உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமர்ப்பிக்க முடிந்தால் அவர்களுக்கு இதிலிலிருந்து விலக்கு அளிக்கப்படும் என்றும் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

# "பலஸ்தீனத்துக்கு வாழ இடங்கொடு"




சோசலிஸ இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் 'பலஸ்தீனத்துக்கு வாழ இடங்கொடு' எனும் தொனிப்பொருளின் கீழ் கொழும்பில் மோட்டார் சைக்கிள் அணிவகுப்பு திங்கட்கிழமை (23) அன்று நடைபெற்றது.

இந்த அணிவகுப்பு கொழும்பில் உள்ள பலஸ்தீன தூதரகம் முதல் சுதந்திர சதுக்கம் வரை சென்றது.

# ‘அணையா தீபம்’

செம்மணி மண்ணில் புதையுண்டு போன உறவுகளுக்கு, நீதி வேண்டியே ‘அணையா தீபம்’ என்ற பெயரில் ஜூன் 25ஆம் திகதி வரை நடத்தப்படவிருக்கும் போராட்டம் திங்கட்கிழமை(23) அன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

– பு.கஜிந்தன்












ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வாக

# டிஜிட்டல் கற்பித்தல்களில் கவனம்



நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வாக டிஜிட்டல் கற்றல் முறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய வலியுறுத்தியுள்ளார்.

டிஜிட்டல் கல்வி நிலையை மேற்பார்வை செய்வதற்கு நியமிக்கப்பட்ட பணிக்குழுவினருடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

தரம் 06 தொடக்கம் தரம் 13 வரையிலான வகுப்புக்களுக்கு டிஜிட்டல் கற்பித்தல் முறையை அறிமுகப்படுத்தி இதனால் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அவதானிப்பதற்கு என, விசேட பணிக்குழாம் பிரதமரால் நியமிக்கப்பட்டிருந்தது.

இவர்களுடன் அண்மையில் கலந்துரையாடல் நடத்திய பிரதமர் இத்திட்டத்தின் சமகால முன்னேற்றங்களை ஆராய்ந்தார்.

பாடசாலைகளில் நிலவும் சவால்களை எதிர்கொண்டு, தேவையான கொள்கைகளை செயற்படுத்த கல்வித்துறையில் டிஜிட்டல் நிலை மாற்றத்தை ஆரம்பித்தல் குறித்து இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் தற்போது உள்ள 42,000க்கும் மேற்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை அவசரமாக தீர்க்கப்பட வேண்டும்.

ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வாக, தற்போதுள்ள வளங்களை திறம்பட பயன்படுத்தி கற்றல் இடைவெளியை குறைக்க வேண்டும்.

இதற்காக அடுத்த ஆறு மாதங்களுக்குள் டிஜிட்டல் கற்றல் முறைமைகளை அறிமுகப்படுத்துவதில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இந்த பணிக்குழுவின் முதன்மை நோக்கங்களில், மாற்றுத்திறனாளி சமுதாயம் உட்பட அனைத்துப் பாடசாலைகளுக்கும் சமமான வளங்கள் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்வது அவசியம்.

இந்த இலக்கை அடைவதற்கு வலுவான, பல்துறை பணிக்குழு அவசியம் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில, பணிக்குழு அதிகாரிகளுக்கு நியமன கடிதங்கள் வழங்கப்பட்டதோடு, பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி பணிக்குழுவின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.



# கடும் பனியால் போக்குவரத்து பாதிப்பு

*ரஞ்சித் ராஜபக்ஷ*

மத்திய மலைநாட்டில் திங்கட்கிழமை(23) அதிகாலை முதல் நிலவும் கடும் பனி காரணமாகப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

ஹட்டன்-நுவரெலியா, ஹட்டன்-கொழும்பு மற்றும் அதை அண்டிய வீதிகளில் இவ்வாறு கடும் பனி நிலவுகிறது.

குறித்த வீதிகளில் வாகனம் செலுத்தும் போது கவனமாக வாகனத்தைச் செலுத்துமாறு ஹட்டன் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பிரிவு தெரிவித்துள்ளது.

# மாணவர்களுடன் குடைசாய்ந்த முச்சக்கரவண்டி



**ரஞ்சித் ராஜபக்ஷ**

நுவரெலியாவில் இருந்து நானுஓயா நோக்கி பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற முச்சக்கர வண்டி ஒன்று நானுஓயா சுரங்கப்பாதைக்கு அருகில் வைத்து திங்கட்கிழமை (23) அன்று விபத்துக்குள்ளானதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முச்சக்கர வண்டியின் முன்னால் பயணித்த லொறியை கவனக்குறைவாக முந்திச் செல்ல முயன்ற போது, முச்சக்கர வண்டி சறுக்கிச் சென்று வீதியோரத்தில் உள்ள கொன்கிரீட் மேட்டில் மோதியுள்ளது.

விபத்தின் போது, பாடசாலை மாணவர்கள் மூவர் முச்சக்கர வண்டியில் பயணித்துள்ளதுடன் அவர்களுக்கோ சாரதிக்கோ விபத்தின் போது காயம் ஏற்படவில்லை என்றாலும், முச்சக்கர வண்டிக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

நுவரெலியா பகுதியில் நிலவும் மோசமான வானிலை மற்றும் கடும் பனி காரணமாக, வாகன ஓட்டுநர்கள் கவனமாக வாகனங்களைச் செலுத்துமாறு நானுஓயா பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.



# சீனியில் கலப்படம் செய்தவருக்கு அபராதம்

சீதுவ பகுதியில் உள்ள ஒரு பல்பொருள் அங்காடி ஒன்றில் வண்ணம் பூசப்பட்ட சிவப்பு சீனியை விற்பனை செய்ததற்காக நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றம் நான்கு இலட்சம் ரூபாய் (400,000) அபராதம் விதித்துள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு சீதுவ பகுதியில் பெறப்பட்ட முறைப்பாட்டின் பேரில், சந்தையில் விற்கப்படவிருந்த சிவப்பு சீனியில் நிறம் கலக்கப்பட்டுள்ளதா? என்பதைக் கண்டறிய நுகர்வோர் விவகார அதிகாரசபையினால் நடத்தப்பட்ட ஆய்வின் போது சீதுவ பகுதியில் உள்ள பல்பொருள் அங்காடியிலிருந்து மாதிரிகளை எடுத்து ஆய்வகத்திற்கு அனுப்பியது.

மாதிரிகள், இலங்கை தரநிலைகளுக்கு இணங்கவில்லை என்பதை ஆய்வக அறிக்கைகளை உறுதிப்படுத்திய பின்னர், 2023ஆம் ஆண்டு நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் மேற்படி சிவப்பு சீனியை விற்பனை செய்தல் மற்றும் வழங்குதல் ஆகிய இரண்டு குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்கு தொடரப்பட்டது.

அதன்படி, கடந்த 19ஆம் திகதி இரண்டு குற்றங்களுக்கும் குற்றத்தை ஒப்புக்கொண்ட பின்னர், மேற்படி பல்பொருள் அங்காடிக்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும், காலாவதியான பொருட்களை விற்பனை செய்ததற்காக, தெமட்டகொட மற்றும் மட்டக்குளிய பகுதிகளில் உள்ள மூன்று பல்பொருள் அங்காடிகளுக்கு, கடந்த 18 ஆம் திகதி அளுத்கடே நீதவான் நீதிமன்றம் தலா ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதித்ததாக நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தலைவர் தெரிவித்தார்.

# கழிவுத் தேயிலையுடன் நபர் ஒருவர் கைது



களனி பிரதேசத்தில் சனிக்கிழமை (21) அன்று பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில், மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற சுமார் 3,681 கிலோ கிராம் கழிவுத் தேயிலை மற்றும் ஒரு லொறியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஹங்வெல்ல பகுதியைச் சேர்ந்த 49 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களனி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நிறுத்தப்பட்டிருந்த வேனில் தீ பரவல்

**கனகராசா சரவணன்**

மட்டக்களப்பு நகரில் பாடு மீன் வீதியில் உள்ள வீடொன்றின் முன்னாள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கே.டி. எச் ரக வேன் ஒன்று திங்கட்கிழமை (23) அதிகாலை முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் இருந்து மட்டக்களப்பில் உள்ள உறவினர் வீட்டிற்குக் குறித்த வேனில் ஞாயிற்றுக்கிழமை (22) இரவு வந்தடைந்து வேனை வீட்டின் முன் நிறுத்தி விட்டு நித்திரைக்குச் சென்றுள்ள நிலையில், அதிகாலை 1.30 மணியளவில் வேன் தீப்பற்றி எரிவதைக் கண்டு உடன் தீயணைப்பு படையினரை வரவழைக்கப்பட்டு தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் இதன் போதும் வேன் முற்றாகத் தீப்பற்றி எரிந்துள்ளது.

து தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# இளம் வயதினரை வெகுவாக பாதிக்கும் 'பெமோ' மன நோய்

அழும் குழந்தை முதல், வயோதிபர்கள் வரையிலும் ஒவ்வொருடைய கைகளிலும் அலைபேசிகள் தவழ்ந்து கொண்டிருக்கின்றன. உலகம் ஒரு விரல் நுனியில் சுருங்கி விட்டது எனலாம். வீட்டில் இருக்கும் உறவுகள், வீட்டுக்கு வரும் உறவினர்களுடன் கூட, நேரத்தை ஒதுக்கிக் கதைப்பதற்கான நேரத்தையும் அலைபேசி அபகரித்து விட்டது.

சமூக வலைத்தளங்களை தொடர்ந்து பல மணி நேரம் பார்க்கும் போது, ஏதோ ஒன்றை இழந்துவிட்ட பய உணர்வு வருவது தான், தற்போது இளம் வயதினரை வெகுவாக பாதிக்கும் 'பெமோ' என்ற மன நோயாகும்.

பெரும்பாலான மனநோய்களுக்கான சரியான காரணம் நமக்குத் தெரியாது, ஆனால் அவை அனைத்தும் மூளையின் ரசாயனங்களில் ஏற்படும் மாற்றங்களால் ஏற்படுகின்றன என்பதை மருத்துவர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதுபோன்ற நோய்களில் மரபணு தாக்கமும் உள்ளது.

காலையில் எழுந்ததில் இருந்து இரவு படுக்கைக்குச் செல்லும் வரை தங்களின் ஒவ்வொரு அசைவையும் வீடியோ எடுத்து, பல தளங்களில் வெளியிடும் வேலையை மட்டுமே செய்பவர்கள் உள்ளனர். தொடர்ந்து இந்த வீடியோக்களை 'ஸ்குரோல்' செய்யும் குழந்தைக்கு, ஒரு வித பய உணர்வு ஏற்படுகிறது. அதாவது, இவர்களைப் போன்று நாம் மகிழ்ச்சியாக இல்லையோ, எல்லா நேரமும் சுறுசுறுப்பாக ஏதோ ஒன்றை இவர்கள் செய்கின்றனர். நாம் எதுவும் செய்யாமல் வீணாக இருக்கிறோமோ என்ற பயம். பொதுவாக இது போன்ற உணர்வு, 12-24 வயதினருக்கு அதிகம் உள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த வயதுக்கு இடைப்பட்டவர்களில் பலரும் விளையாட்டு மைதானங்களுக்குச் செல்லாமல், அலைபேசிகளிலேயே பல மணிநேரத்தைக் கழிக்கின்றனர்.

இவர்களைப் போன்று நாமும் ஆடை அணிய வேண்டும். புதுப்புது இடங்களுக்கு செல்ல வேண்டும். குடும்பத்துடன் சென்று மகிழ்ச்சியாக வீடியோ எடுக்க வேண்டும். சமூக வலைத்தளங்களில் அப்-லோட் செய்து 'லைக்'குகளை அள்ள வேண்டும் என்ற அழுத்தம் வந்து விடுகிறது.

நான் மட்டும் எல்லாவற்றையும் இழக்கிறேன் என்ற பய உணர்வு வருகிறது. இதன் வெளிப்பாடு தான், எதற்கெடுத்தாலும் கோபம், பிடி வாதம், பெற்றோர் எது சொன்னாலும் எதிர்த்து பேசுவது அதிகரிக்கிறது.

குழந்தைகள் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். சமூக வலைத்தளங்களில் பிசியாக இருப்பவர்கள் ஏதோ சாதிக்கின்றனர் என்ற உணர்வைத் தருகின்றனர் என்பது நிஜம். நாம் சமூக வலைத்தளங்களில் பார்க்கும் மற்றவர்களின் வாழ்க்கை உண்மையில் அவர்களின் வாழ்க்கை தானா என்பது தெரியாது. அதற்குப் பின்னால் நிறையப் போராட்டம், சலிப்பு, விரக்தி இருக்கலாம். அதை மறைத்து, வெளி உலகிற்கு, மற்றவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக இதைச் செய்யலாம். மாறாக, வீடியோவில் பார்ப்பது தான் நிஜம் என்று நாம் நம்புவ தால் தான் பயம் வருகிறது. இது உண்மை கிடையாது என்பது தெரிந்தால் பய உணர்வு விலகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

எதுவும் கிடைக்கும் என்றோ, அல்லது எதுவுமே கிடைக்காது என்றோ மனதைப் பலவீனப்படுத்தக்கூடாது.

வெற்றிகளை நோக்கிப் பயணிக்கும்போது, சந்தேகம் வரவே கூடாது; அச்சமும் கூடாது. எங்களை நாங்களே பலப்படுத்த வேண்டும்.

சாதாரண விடயங்களைக் கூட, பதற்றத்துடன் செய்யும் நபர்கள் உண்டு. இதனால் வருவது குழப்பம்தான். பரீட்சைக்குப் போகின்றவர்கள் திருப்தியுடனும் நம்பிக்கையுடனும் செல்ல வேண்டும்.

எந்த நேரமும் எவரது பேச்சையும் காதில் வாங்கிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அதே போல் பரீட்சை முடிந்த பின்னர், சாவகமாகவெ திருப்தி நிலையில் செல்லுங்கள். தொடர்ந்தும் உங்கள் பாடங்களை மீண்டும் மீட்டி, மீட்டிப் படிக்கவும்.

எதிர்மறையாகப் பேசுபவர்களின் பேச்சுகளைக் கண்டுகொள்ளக் கூடாது. மனம் நுட்பமானது. அதைச் சிறந்த முறையில் நேரிய சிந் தனைக்குள் உட்படுத்த வேண்டும்.

எங்களை மிஞ்சி எதுவும் நடக்காது என்பதை உறுதி பூணுக. எமக்கான காலங்களை சிறப்பாகப் பயன்படுத்துவோம்.

முன்னேற்றங்கள் ஒருவருக்கும் மட்டும் சொந்தமானது இல்லை. அது பொதுவானது. இதை உணருங்கள், மேன்மை பெறுங்கள்.

–பருத்தியூர் பால.வயிரவநாதன்

# ஈரான் - இஸ்ரேல் யுத்தமும் உலகப் போர் பற்றிய அச்சமும்

மொஹமட் பாதுஷா

ஈரான் மீது தாக்குதல் நடத்தியதன் மூலம் அந்நாட்டை இஸ்ரேல் வலிய வம்புக்கு இழுத்ததைத் தொடர்ந்து, நிலைமைகள் தலைகீழாக மாறியுள்ளன. இரு நாடுகளுக்கு இடையிலான யுத்தத்தில் அநாவசியமாக அமெரிக்கா உள்நுழைந்ததன் விளைவாக, இது ஒரு உலக யுத்தத்திற்கு வழிகோலுமா என்ற அச்சம் மக்களிடையே இன்று ஏற்பட்டிருக்கின்றது.

இஸ்ரேலின் மேலாதிக்க சிந்தனைக்கு முட்டுக் கொடுக்கும் அமெரிக்காவுடன் அநியாயத்தின் கூட்டாளிகளான வேறு சில நாடுகளும் இணையுமா என்பதிலும், ஈரானுடன் ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகள் கைகோர்க்குமா என்பதிலுமே இந்தப் போர் எந்தளவுக்கு விரிவடையும் என்ற விடயம் தீர்மானிக்கப்படும்.

நாடற்றவர்களாகத் திரிந்த யூதர்களுக்குக் குடியேறுவதற்கு இடங்கொடுத்த பலஸ்தீன மக்களின் நிலத்தை அபகரித்துக் கொண்டு பூர்வீக மக்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்காக இஸ்ரேல் காசாவில் இன அழிப்பை மேற்கொண்டு வருகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையும். உலகின் பலம் குறைந்த நாடுகளுக்கு ஜனநாயகம், மனித உரிமைகள், போர்க் குற்றங்கள் பற்றி பாடம் கற்பிக்கின்ற அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளும் இதற்கு ஒன்றில் ஒத்துழைப்பு வழங்குகின்றன அல்லது கண்டும் காணாது போல் இருக்கின்றன.

ஈராக், சிரியா, டியூனிசியா, லிபியா, லெபனான், துருக்கி என ஏகப்பட்ட நாடுகளில் அமெரிக்காவும் நேச நாடுகளும் வருடக் கணக்காகச் சண்டித்தனம் காட்டி வருகின்றன. குறிப்பாக இஸ்லாத்தைப் பின்பற்றும் மக்களும் அங்குள்ள வளங்களும் இலக்கு வைக்கப்பட்டன. நிராயுத பாணிகளைக் கொன்று விட்டு 'வெற்றி' என்று அறிக்கை விடுகின்ற வேலைகளும் நடக்கின்றன.

மேற்குலக ஊடகங்கள் சொல்கின்ற சோடிக்கப்பட்ட செய்திகளைத்தான் மக்கள் நம்புவார்கள் என்றிருந்த காலம் வரை இந்த வித்தைகள் எல்லாம் பலித்தன. இன்று நவீன ஊடகங்கள் வந்து விட்டன. பொய்ச் செய்தி தயாரிக்கப்படுவதற்கு முன்னரே களத்தில் இருந்து நேரடி ஒளிபரப்பு வந்து விடுகின்றது. இது அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளுக்கு பெரும் சவாலாக மாறியிருக்கின்றது.

குறிப்பாக, பலஸ்தீன விவகாரத்தை எடுத்துக் கொள்ளலாம். பலஸ்தீன மக்கள் போராடுவது அவர்களது சொந்த நிலத்திற்காக ஆகும். நிராயுதபாணியான பலஸ்தீன மக்கள் ஆயிரக் கணக்கில் கொல்லப்பட்டனா, கொல்லப்படுகின்றனர். பெண்கள், குழந்தைகள், வயோதிபர்களை அழிப்பதை ஒரு வேலையாக அமெரிக்க ஆதரவு இஸ்ரேல் படைகள் செய்து வருகின்றன.

'90 சதவீதமான யூதர்களை நான் கொன்று விட்டேன். மீதமுள்ள 10 சதவீதமானவர்களைப் பார்த்து ஏன்? இவர்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள் என்று உலகம் கண்டுகொள்ளட்டும் என அவர்களை விட்டு வைக்கின்றேன்' என்று ஹிட்லர் சொன்னது இப்போதெல்லாம் அடிக்கடி ஞாபகத்திற்கு வருவதுண்டு.

பலஸ்தீனத்தில் உணவு, குடிநீர், தங்குமிடம், மருந்துகள் என எந்தவொரு அடிப்படைத் தேவையையும் மறுத்து, பசியோடு கையில் எதுவுமின்றி நின்ற மக்களைக் கொன்று விட்டு, நாங்கள் தைரியசாலிகள் என்று அவர்கள் கூறியதை உலகம் பார்த்தது.

ஆனால், அமெரிக்காவால், இஸ்ரேலால், இவர்களுக்குப் பின்னால் நிற்கும் வேறு சில நாடுகளால் இதனை உலக மக்களுக்கு மறைக்க முடியாத நிலை இப்போது உருவாகி விட்டது.

இப்போது, பலஸ்தீன மக்களுக்காக மட்டுமன்றி, காட்டுமிராண்டிகளினால் அநியாயமாகக் கொல்லப்படும் எல்லா துணிந்து குரல் கொடுக்கும் மக்களின் எண்ணிக்கை உலகெங்கும் அதிகரித்துள்ளது.

ஐ.நாவில் ஐரோப்பிய ஒன்றியத்தில், ஜெனிவாவில், ஐரோப்பிய நாடுகளின் பாராளுமன்றங்களில் கணிசமான அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்கள் நியாயத்திற்காக நெஞ்சை நிமிர்த்திப் பேசுகின்றார்கள். ஏன் அமெரிக்காவில் பல செயற்பாட்டாளர்கள் அரசின் போக்குகளை எதிர்க்கின்றார்கள்.

சமகாலத்தில் உலக ஒழுங்கு மெல்ல மெல்ல மாறி வருகின்றது. இன்னும் அமெரிக்கா முதலிடத்தில் இருந்தாலும், அதற்கு கிட்டத்தட்ட சமமாக ரஷ்யா, சீனா, கொரியா எனப் பல நாடுகள் பல நாடுகள் முன்னெறி வருகின்றன. பல ஆண்டுகள் பொருளாதார தடை விதிக்கப்பட்ட ஈரானின் பெரு வளர்ச்சி கண்டு உலகமே திகைத்து நிற்கின்றது.

பல அரபு நாடுகள் பொருளாதார ரீதியாகவும் ஏனைய அடிப்படைகளிலும் முன்னேறியிருக்கின்றன. ஆனால், முஸ்லிம் நாடுகளிடையே ஒற்றுமை இன்மையும், சில நாடுகள் வொஷிங்டனுடனான திரைமறைவு உறவுகளைப் பேணுவதற்காக, முஸ்லிம்கள் அழிக்கப்படுவதை வேடிக்கை பார்ப்பதும்தான் இத்தனை அழிவுகளுக்கும் வித்திட்டுள்ளது எனலாம்.

இன்னுமொரு உலக மகா யுத்தம் உருவாகி விடக் கூடாது என்ற நோக்கத்தில் ஐ.நா. சபை உருவாக்கப்பட்டது. ஆனால், உலக யுத்தத்திற்கு குறைவில்லாத மக்கள் ஒரு சில நாடுகளால் உத்தியோகபூர்வமாக கொல்லப்பட்டுள்ளனர். இந்த அடிப்படையில் நோக்கினால், ஐ.நா. உள்ளிட்ட அமைப்புகள் தோல்வி கண்டதாகவே கருத வேண்டியுள்ளது.

சுருக்கமாகச் சொன்னால், உலகில் பணம், பாதுகாப்பு, ஆயுதங்கள் உள்ளிட்ட எல்லா விடயப் பரப்புகளிலும் பலம் பொருந்திய ஒரு நாடாக நாம் மட்டுமே இருக்க வேண்டும் என்று அமெரிக்கா நினைக்கின்றது. இந்த நிலைப்பாட்டுக்கு சில நாடுகள் ஒத்துஊதுகின்றன. ஆனால், உலகில் கணிசமான நாடுகள் இந்த நாட்டாமைத்தனத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

உலகுக்கு நாட்டாமை வேலை பார்க்கின்ற, ஜனநாயகம் பற்றி வகுப்பெடுக்கின்ற நாடுகளும் பொலிஸ் காரனைப் போல, தன்னை காட்டிக் கொண்டு மறுபுறத்தில் மனிதக் குலத்திற்கு எதிரான அநியாயங்களை நியாயப்படுத்துகின்ற நாடுகளும் தான்தோன்றித்தனமாக செயற்படுவதற்கு இடமளிக்க முடியாது என்பதுதான் உலக மக்களின் பொதுவான அபிப்பிராயமாகும்.

ஈரானிய புரட்சி ஏற்பட்டதில் இருந்து ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் ஒரு முரண் நிலை இருந்தது. பின்னர் அணுவாயுத உற்பத்தி உள்ளிட்ட விவகாரங்களில் அமெரிக்காவையும் உள்ளடக்கிய முத்தரப்பு முரண்பாடாக இது மாற்றமடைந்தது எனலாம்.

இந்நிலையில், இஸ்ரேல் ஈரான் மீது தாக்குதல் நடத்தியதன் மூலம் அடுத்தகட்டப் போரைத் தொடங்கி வைத்திருக்கின்றது. எந்த வளமும் இல்லாத நாடு என கருதப்பட்ட ஈரான், இத்தனை தொழில்நுட்பங்களையும், போர் தளவாடங்களையும் இரகசியமாகத் தயாரித்து வந்திருக்கின்றது என்பதை இன்று மேற்குலகம் பார்த்து வியந்து நிற்கின்றது.

ஈரான் தாக்குதல் நடத்திய 48 மணித்தியாலங்களுக்குள்ளேயே சாதாரண இஸ்ரேல் மக்கள் ஒடுங்கிப் போய் விட்டார்கள். இஸ்ரேலிய மக்கள் கூர்மையான அறிவாளிகள் என கருதப்படுகின்றார்கள். ஆனால், பலஸ்தீனத்தில் கவச வாகனத்திற்கு முன்னால் வெறுங்கையுடன் நிற்கின்ற சிறுவனுக்கு இருக்கின்ற தைரியம் கூட அவர்களுக்கு இல்லை என்பது காணொளிகளில் வெளிப்பட்டது.

யூத மக்கள் ஈரான் மக்களிடம் மன்னிப்புக் கேட்கும் காணொளிகள் வெளிவந்தன. உண்மையில். இஸ்ரேலியர்களும் மனிதர்கள்தான். மனிதர்கள் எங்குக் கொல்லப்பட்டாலும், அதற்காக நாம் குரல் கொடுக்க வேண்டும். ஆனால், இங்கு ஒரு கேள்வியுள்ளது.

அதாவது, இப்படித்தானே பலஸ்தீன மக்கள் வருடக் கணக்காக அமெரிக்க, இஸ்ரேல் படைகளைப் பார்த்துக் கெஞ்சிக் கொண்டிருக்கின்றார்கள். தங்களைச் சொந்த இடத்தில் உயிருடன் வாழ விடுங்கள் என்று மன்றாடிக் கொண்டிருக்கின்றார்கள். இதைத்தான் நீங்கள் பல இஸ்லாமிய நாடுகளில் முப்பது வருடங்களாகச் செய்து கொண்டிருக்கின்றீர்கள்.

அங்கெல்லாம் நீங்கள் பார்க்காத பச்சாதாபத்தை உங்கள் மக்களின் மீது அவர்கள் காட்ட வேண்டும் என்று எதிர்பார்க்க முடியுமா? உங்களுக்கு வந்தால் இரத்தம் அவர்களுக்கு வந்தால் தக்காளிச் சட்னியா என்றுதானே இவ்விடத்தில் கேட்க வேண்டியிருக்கும்.

ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான யுத்தம் அமெரிக்காவின் உள் வருகையுடன் வேறு உருவெடுத்திருக்கின்றது. இது அமெரிக்காவின் வழக்கமான பாணி மட்டுமல்ல, ஒரு வகையில் அதிகாரத்தையும் தன்மானத்தையும் காப்பாற்றுவதற்கான முயற்சி என்றும் கூறலாம்.

அதுமட்டுமன்றி, அமெரிக்கா என்பது யூதர்களின் கையில் உள்ளது. ட்ரம்ப் ஜனாதிபதியாக இருந்தாலும் அதிகாரத்திலும் அழுத்தம் கொடுக்கும் இடத்திலும் இஸ்ரேலை பூர்வீகமாகக் கொண்ட யூதர்கள் இருக்கின்றார்கள் என்பது உலகறிந்த இரகசியமாகும்.

எனவே, ட்ரம்ப் இந்த முடிவுக்கு வந்தது ஆச்சரியப்படத்தக்கதல்ல. அமெரிக்கா இந்த விவகாரத்திற்குள் வந்தால் நாங்களும் இதில் குதிப்போம் என்ற தொனியில் ஏற்கெனவே ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் அறிவித்திருந்தன. இப்போது அமெரிக்கா களமிறங்கி விட்டது. சீனா, ரஷ்யா அல்லது முஸ்லிம் நாடுகள் ஈரானுக்குத் துணையாகக் களத்திற்கு வருமா? என்பதுதான் அடுத்த கேள்வியாகும்.

இந்தப் போர் இரண்டு ஆயிரம் கிலோ மீற்றர்களை தாண்டி இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. நடுவில், ஓரத்தில், பக்கத்தில் என பல நாடுகள் உள்ளன. அமெரிக்கா உள்ளே வந்தது போல வேறு நாடுகள் போரிடத் தொடங்கினால் நிலைமை இன்னும் மோசமாகும். இது ஒரு உலகப் போராக அல்லது அதற்குச் சமமான வீச்சில் உருவெடுக்கக் கூடிய ஆபத்து உள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மீது ஈரான் தாக்கினாலும் தாக்காவிட்டாலும் கூட, அந்நாடுகளில் பல்வேறு பாதுகாப்பு பிரச்சினைகள் தோற்றம் பெற வாய்ப்புள்ளது. கச்சா எண்ணெய் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி, பாதுகாப்பு பிரச்சினைகள் ஏற்படும். தொழில் இழப்புக்கள் ஏற்படலாம்.

ஈரான் - இஸ்ரேல் தாக்குதல் என்றவுடன், இலங்கையில் எரிபொருள் நிரப்ப நீண்ட வரிசைகளில் காத்து நின்றதை விட பன்மடங்கு பலமான பொருளாதார, தாக்கங்கள் இலங்கைக்கும் ஏற்படும். ஆகவே, இது எங்கே போய் முடியும் என்றுதான் தெரியவில்லை.

## கடிதங்கள்

### பாதை சீர்கேடு

ஒவ்வொரு அரசாங்கமும் பாராளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கும் போது, மலையக பிரதேசத்தின் பாதைகளை அபிவிருத்தி செய்வதற்காகப் பல கோடி ரூபாய் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டதாக கூறினாலும், 200 வருட காலமாக இம்மக்கள் இன்னும் பாதை வசதிகள் இல்லாமல் பெரும் சிரமத்திற்கு மத்தியில் போக்குவரத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.

நுவரெலியா, அக்கரப்பத்னை பிரதேச சபைக்குட்பட்ட மன்றாசி நகரத்திலிருந்து, ஆட்லோ தோட்டத்தின் ஊடாக அல்பியன் சந்திவரை சுமார் 04 கிலோ மீட்டர் தூரம் கொண்ட பிரதான வீதி பல வருடங்களாகப் புனரமைப்பு செய்யாத காரணத்தினால் சேரும், சகதியுடன் வயலை போன்று காணப்படுகிறது.

இதனால் இவ்வீதியைப் பயன்படுத்தும் ஆட்லோ அல்பியன் பெரிய நாகவத்தை சின்ன நாகவத்தை சென்மார்கர்ட் ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 9,000 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பாதையைப் புனரமைப்பு செய்து தருமாறு நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களிடம் பிரதேச மக்கள் பல முறை கோரிக்கை விடுத்த போதிலும், இதுவரை எந்த ஒரு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லையென இப்பகுதி மக்கள் கவலை அடைந்துள்ளனர்.

– துவாரகஷான்

# பெண் கல்வி சமூக முன்னேற்றத்தின் துருவ நட்சத்திரம்

நிசன்குமார் கோபிநாத்,
முதலாம் வருடம்,
கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.



“ஊது குழலைக் கையில் எடுக்கும் பெண்கள் எழுதுகோலைக் கையில் எடுக்கவேண்டும்” என்ற பாரதியாரின் கவிவரியானத பெண்களைக் கல்விப் பாதையை நோக்கி வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது. சமையலறையில் ஊதுகுழலைக் கையில் எடுக்கும் ஒரு பெண் எழுதுகோலை கையில் எடுத்தால் முழு சமுதாயமும் பெண் வசப்படும் அவ்வளவு பெருமை உடையவள் பெண் மனித இனத்தில் பெண்ணியம் மற்றும் பெண்ணுரிமை போன்ற சொற்கள் வயது வேறுபாடுகளைக் கடந்து எல்லா பெண்களையும் குறித்து நிற்கின்றது.

உலகில் பெண் தலைமைத்துவமே பெருமையுடையதும் சிறப்புடையதும் கூட. ஆரம்பக் காலத்தில் பெண்கள் ஆண் வர்க்கத்தினரால் வழிநடத்தப்பட்டார்கள். அவர்களின் உரிமைகள், நலன்கள், சுதந்திரம் என்பன மறுக்கப்பட்டன. அத்துடன், சிறகற்ற பறவையைப்போல அடையாளப்படுத்தபடுத்தப்பட்டார்கள். சமய நம்பிக்கைகள், மரபுகள் வழக்காறுகள் என்பன அவர்களுக்குப் புறம்பாகவே இருந்தன.

உண்மையிலேயே அவர்களின் ஆரம்பக்காலம் அடிமைக்காலம். நரக வேதனையை விடக் கொடுமையானது. நான்கு சுவரும், வீட்டுச்சூழலும், மதில்களுக்கும் உள்ளேயே உலகமாக இருந்த காலமும் உண்டு. ஆண் தலைமைத்துவம், சிறுவயது திருமணம், அடக்குமுறை என்பன அவர்களின் சுதந்திரத்தை நிர்மூலமாக்கியது.

பிற்பட்ட காலப்பகுதியில் அடிமை முறை சமூகம் ஒழிய வேண்டும் என குரல் கொடுத்தவர்கள் பலர். அதில் பாரதியார் முக்கியமானவர். அவர் பெண் விடுதலை பற்றிய கருத்தை சமூகத்திற்கு எடுத்துரைக்கக் கவிதை, கட்டுரை, பாடல்களையும் வடிவமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்பக்காலத்தில் மாத்திரம் பெண்களுக்குச் சுதந்திரம் உறுதி செய்யப்பட்டிருந்தால் இச்சமயம் பல துறைகளில் சாதனை சிற்பிகளாக ஒழிப்பு கட்டி தனது சாதனையை உலகமெங்கும் சுடரொளியாய் பரப்பியிருப்பார்கள்.

இருந்தாலும், சமூகத்தில் சில ஆண்கள் பெண் சுதந்திரம் பற்றிச் சிந்திப்பது இல்லை. ஆண் ஒருவன் ஒரு பெண்ணின் சுதந்திரத்தை பறித்தான் என்றால், அது அவன் தன்தாயின் உயிரை பறிப்பதற்குச் சமமாகும். எல்லா ஆண்களும் எல்லா பெண்களையும் மேன்மையானவர்களாகக் கருதினால், பெண்களின் சுதந்திரம் இயல்பாகவே மேம்பாட்டடையும். இதை எவரும் கவனத்தில் கொள்வதில்லை. அவ்வாறான கருத்தை அவர்கள் தமக்குள் உருவாக்கினால் பெண்ணுரிமை மேம்படுமே தவிர அது நிர்மூலமாக்கப்படாது என்பது உறுதியான விடயமாகும்.

### பெண் கல்வியின் சிறப்பம்சம்

19ஆம் நூற்றாண்டில் இருந்து இன்று வரை பெண்களின் முன்னேற்றத்திற்காக இடைவிடாது எடுக்கப்பட்ட முயற்சியே பெண் கல்வியாகும். அந்த வகையில், இன்றைய உலகில் எல்லா மனிதர்களையும் இன, மத, பேத பாகுபாடின்றி எல்லோராலும் போற்றப்படும் ஓர் ஆயுதமாக பெண் கல்வி காணப்படுகின்றது. அது பெண்ணியத்தில் வலுப்பெற்றால் இன்றைய நவீன சமூகத்தில் கல்வி உலக மாற்றத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் மாற்றும் அடித்தளமான சக்தியாக உருவெடுக்கும். தொழிலையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக்கொள்ளும் சமுதாயம் பெண்களின் நலனையோ அவர்களின் திறமையினையோ கருத்தில்கொள்வதில்லை.

ஏன் அவர்களும் மனிதர்கள் தானே அவர்களுக்கும் உரிமை, சுதந்திரம் என்பன உண்டு என்பதனையும் நாம் கருத்தில் கொண்டு அவர்களையும் சமமாக மதிக்க வேண்டும். ஓர் ஆண் கல்விகற்றால் அவன் மட்டுமே நன்மை அடைவான். ஆனால், ஒரு பெண் கல்வி கற்றால் அவளுக்கு பின்னால் வரும் சமூகமே கற்கின்றது. காரணம் குடும்பத் தலைவியாக உள்ள ஒரு பெண் கல்வியால் அறிவை பெற்றால், அதனால் அவளது பிள்ளைகளையும் சிறப்பாக வழிநடத்துவாள். இது தொடர்ந்து ஒரு சமூகமாகக் கற்க வாய்ப்பளிக்கிறது.

'சிறுதுளி பெருவெள்ளம் போல' எங்கும் அதன் நன்மை பரவலையும் இவ்வளவு காலமும் அடிமை சமூகத்தில், அறைக்குள் நீங்கிய காலம் செல்ல, இன்று பல கல்வி சாதனைகளையும் கல்விக்கு அப்பால் பல்வேறு சமூக செயற்பாடுகளில் முதலிடம் வகிப்பவர்களாகப் பெண்கள் இருக்கின்றார்கள். கல்வியால் வெற்றியடைந்து விண்வெளி வரை அவர்களது பயணப்பாதை உயர கால் தடம் பதித்துள்ளது. அதற்கு காரணம் கல்வி எனும் பெருஞ் செல்வமே என்பதை மறுக்க முடியாது.

விண்வெளி வீராங்கனையான வாலண்டினா திரைஸ்கோவா 26ஆம் வயதிலேயே விண்வெளி சென்ற இளம் பெண் ஆவாள். இது பெண் சமுதாயத்திற்கு மிகப்பெரிய வெற்றியும் கூட. இதனையடுத்து, இந்தியாவின் ஏவுகணை பெண்மணியாக டெல்ஸ்லீட் தாமஸ் எனும் பெண் உலக பெண் சாதனையை கல்வியால் உயர்த்திய ஒருவருக்கு நல்ல சான்றாக குறிப்பிட முடியும். பெண் கல்வியே அவர்களின் இனத்தின் விடுதலைக்கும் வெற்றிக்கும் ஒரு வழிகாட்டியாக அமையும்.

உலகில் பல்வேறு சாதனைகளைப் படைத்த பெண்களும் இவ்வுலகில் உள்ள மற்ற பெண்களுக்குக் கூறுவது எம்மை விடவும் சாதனை படைக்கிற பெண் சமுதாயம் உருவாக வேண்டும் என்றே. இவர்களைத் தவிர, இலங்கை திருநாட்டிலே ஒரு பெண்ணாகப் பிறந்த சாதனையை உலகளாவிய ரீதியில் எடுத்துக்காட்டிய உலகில் முதல் பெண் ஜனாதிபதியான சந்திரிகா பண்டாரநாயக்கவும் ஒரு பெண் தான்.;

### தற்காலத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

சமூகத்தில் கல்வியில் உயர்ந்து சிறப்பிக்கின்ற பெண்களும் சரி, கல்வியில் உயர்மட்டத்தை அடைய வேண்டும் என்ற இலக்கில் பயணிக்கின்ற பெண்களும் சரி ஏனைய பெண்களும் தற்காலத்தில் எதிர்நோக்குகின்ற பிரச்சினையை நோக்குமிடத்து, பொருளாதார பிரச்சினையும் பெண்கள் கல்விகற்பதில் ஒரு சவாலாக இருக்கின்றது. வருமையான குடும்ப பின்னணியைக் கொண்ட பெண்கள் தங்களது கல்வி நடவடிக்கைகளை இடையில் கைவிட்டு தொழில்களை நாடிச் செல்கின்றார்கள். இதனால் அவர்கள் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் பாலியல் கொடுமைகளுக்கும் உட்பட்டு வாழ்க்கையும் சீர்குலைந்த நிலைக்கு உள்ளாகின்றது. இதனால் பெண்களின் இலக்கு திசை திருப்பப்படுவதுடன், ஒரு தவறான புரிந்துணர்வும் சமூகத்தில் கட்டமைக்கப்படுகின்றது.

2023ஆம் ஆண்டில் ஒவ்வொரு பத்து நிமிடங்களுக்கும் ஒரு பெண் அல்லது சிறுமி கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை குறிப்பிடுகின்றது. இது சராசரி ஒரு மணித்தியாலத்தில் ஆறு பெண்கள் கொல்லப்படுகின்றார்கள். மேலும், உலகம் முழுவதும் 80 பெண்களில் பதினெட்டு வயதுக்குட்பட்ட பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கு ஆளாகின்றனர். இது பெண் வன்முறையின் தீவிரத்தை வெளிப்படுத்துகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் நிதியத்தின் அறிக்கையின்படி, இரண்டு வருடங்களுக்கு முன்னரான அறிக்கையின் படி, இன்று வரை பெண்களுக்கான வன்முறைகள் அதிகரித்துள்ளதே தவிர, குறையவில்லை. இதனால் எதிர்காலத்தில் முழு பெண் சமுதாயமே ஒரு பாதிப்பை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலையையும் உருவாக்கி விடுகின்றது. பெண்கள் மற்றும் குழந்தைகளினை பாதுகாத்தல் என்பது இன்றியமையாத பணியுமாக உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

### பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீரவழி முறைகள்

பெண்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளைக் குறைக்க அதற்கான உயர் மட்ட தீர்வுகளை நாம் விரைவாகவே எட்டவேண்டிய சூழ்நிலை உருவாகி விட்டது. பெண்கள் பற்றியும் அவர்களது முக்கியத்துவம் பற்றியும் சமூகம் மற்றும் உலகளாவிய ரீதியில் பெண்கள் பாதுகாப்பு தொடர்பான கருத்துக்களை வலுப்பெறச் செய்வதன் மூலம் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வினை எய்துவதற்கு அடித்தளமாக அமையும்.

உலகளாவிய ரீதியில் பெண்கள் தொடர்பாக அக்கறையுடன் இயங்கி வரும் பெண்களுக்கான சர்வதேச அமைப்பு, ஐக்கிய நாடுகள் சபை, வேர்ல்ட்யுவி போன்ற அமைப்புக்களின் ஊடாக பெண்கள் அன்றாடம் எதிர் நோக்கும் அச்சுறுத்தல்களைக் குறைத்து பெண்களை வலுவூட்டும் நிகழ்ச்சி திட்டங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். பால்நிலை சமத்துவம் தொடர்பான எண்ணக் கருவினை கட்டியெழுப்புதலும், அது தொடர்பான கல்வியைப் பாட அத்தியாயத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதோடு, அது தொடர்பான சர்வதேச, தேசிய மட்ட நிகழ்ச்சி திட்டங்களை மேம்படுத்தல் வேண்டும். அத்துடன் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக காணப்படுகின்ற சட்டதிட்டங்களைக் கடுமையாகப் பின்பற்றச் செய்து புதிய சட்ட விதிமுறைகளை உட்சேர்த்தல் வேண்டும்.

பொருளாதார ரீதியில் பெண்கள் உள்ளாகும் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கான சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்கி அதில் அவர்களை மேம்பாடுடைய செய்தல். எடுத்துக்காட்டாக, முட்ரா கடன் திட்டம் மூலம் அண்மைக்காலங்களில் இலங்கை அரசு கிளிநொச்சி மாவட்டத்தில் குடும்பங்களை பெண் தலைமை குடும்பங்களைத் தெரிவு செய்து, வலுப்படுத்தும் தேசிய மத்திய நிலையம் ஊடாக பெண்களுக்கான வருமான மீட்டும் பொருளாதார திட்டங்களை விருத்தி செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மலையகப் பிரதேசங்களில் பெண்களின் கல்வி மற்றும் ஏனைய நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை மேற்கொள்ளல் என்பன முக்கியமானதொரு அம்சம் ஆகும். பெண்களின் பாதுகாப்பான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த வேண்டும். பெண்களுக்கான பாதுகாப்பான மற்றும் வசதியான பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளை உருவாக்க வேண்டும், பெண்களுக்கு ஏற்ற பாடத்திட்டங்களை உருவாக்க வேண்டும். பெண்களுக்கு தொழில் சார்ந்த கல்வியை வழங்க வேண்டும். பெண் கல்வியை தடுக்கும் சமூகக் குற்றங்களை தடுக்க கடுமையான சட்டங்களை அமுல்படுத்த வேண்டும்.



# ஜெயிலருக்கு வரவேற்பு



நடிகர் ரஜினிகாந்த் மற்றும் இயக்குநர் நெல்சன் கூட்டணியில் வெளியான ‘ஜெயிலர்’ படம் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

தற்பொழுது ஜெயிலர் 2 திரைப்படம் உருவாகி வருவதுடன், முதற்கட்ட படப்பிடிப்பு பணிகள் கேரளா பகுதியில் நடைபெற்றது.

படத்தில் நடிகர் ஃபகத் ஃபாசில், மோகன்லால், தெலுங்கு நடிகர் பாலையா இணைந்துள்ளதுடன், அனிருத் இசையமைக்கும் இந்தப் படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்து வருகிறது.

இந்த நிலையில், படத்தின் அடுத்தகட்ட படப்பிடிப்பு பணிகள் இந்த வாரம் மைசூரில் நடைபெற்று வருகிறது. இன்று படப்பிடிப்பு தளத்தில் ரஜினியைப் பார்க்க மக்கள் கடலெனத் திரண்டுள்ளனர்.

ரஜினிகாந்த் காரில் வரும்போது அனைவருக்கும் கை காட்டி அன்பை வெளிப்படுத்தினார். அப்போது எடுத்த காணொளி இணையத்தில் வைரலாகி வருகிறது.

# கமல்ஹாசனுடன் பேச்சுவார்த்தை

03)

தமிழ் திரையுலகின் வெற்றி இயக்குநர்களில் ஒருவரான அருண்குமாரின் அடுத்த படத்தில் உலக நாயகன் கமல்ஹாசன் நடிக்க இருப்பதாகவும் அதற்கான பேச்சுவார்த்தை இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது.





விஜய் சேதுபதி நடித்த ‘பண்ணையாரும் பத்மினியும்’ படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமான அருண்குமார், அதன்பிறகு விஜய் சேதுபதி நடித்த ‘சேதுபதி’, ‘சிந்துபாத்’ உள்ளிட்ட படங்களை இயக்கினார்.

பின்னர் சித்தார்த் நடித்த ‘சித்தா’ என்ற படத்தையும் இயக்கினார். அதன் பின்னர் விக்ரம் நடித்த ‘வீரதீர சூரன்’ படத்தின் இரண்டாம் பாகத்தை இயக்கிய அவர், தற்போது அந்த படத்தின் முதல் பாகத்தை இயக்கி வருகிறார்.

இந்த நிலையில், இந்த படத்தை முடித்தவுடன் உலக நாயகன் கமல்ஹாசன் நடிக்கும் படத்தை அருண்குமார் இயக்க இருப்பதாகவும், அவர் கூறிய கதை கமல்ஹாசனுக்கு பிடித்துவிட்டது என்றும், கமல்ஹாசன் இந்த படத்தைத் தனது ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனம் மூலம் தயாரிக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது.

திரைக்கதை அமைக்கும் பணியை தற்போது அருண்குமார் கவனித்து வருவதாகவும், விரைவில் இந்தப் படத்தின் அறிவிப்பு வெளியாகும் என்றும் கூறப்படுகிறது.

கமல்ஹாசன் தற்போது அன்பறிவ் இயக்கத்தில் உருவாகும் படத்தில் நடித்து வரும் நிலையில், இதை முடித்தவுடன் அவர் ‘இந்தியன் 3’ மற்றும் ‘கல்கி 2898ஏடி’ படத்தின் 2ஆம் பாகம் ஆகிய படங்களில் நடிக்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ‘குபேரா’ படத்தில் நான் தான் ஹீரோ

‘குபேரா’ படத்தின் ஹீரோ நான் தான் என்றும், தன்னுடைய கேரக்டரை சுற்றித்தான் அந்த படத்தின் கதை நகரும் என்றும் நாகார்ஜுனா பேட்டி ஒன்றில் கூறியிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தனுஷ், ராஷ்மிகா மந்தனா, நாகார்ஜுனா நடிப்பில் சேகர் கம்முலா இயக்கத்தில் தேவி ஸ்ரீ பிரசாத் இசையில் உருவான ‘குபேரா’ திரைப்படம் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த படம் தமிழை விட தெலுங்கில் ரசிகர்கள் மத்தியில் சிறப்பான வரவேற்பைப் பெற்றுள்ளதாகவும், தமிழை விடத் தெலுங்கில் அதிக வசூல் செய்திருப்பதாகவும், அதற்கு நாகார்ஜுனாவின் அழுத்தமான கேரக்டர் தான் காரணம் என்றும் கூறப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், நாகார்ஜுனா அளித்த பேட்டியில், “குபேரா படத்தின் ஹீரோ நான் தான். இந்த படத்தின் மொத்த கதையும் என்னுடைய தீபக் என்ற கேரக்டரை சுற்றியே வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆரம்பம் முதல் இறுதி வரை தீபக் தான் கதையை நகர்த்திச் செல்வான்,” என்று கூறியுள்ளார். நாகார்ஜுனாவின் இந்த கருத்து தனுஷ் ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தனுஷ் இந்தப் படத்தில் உயிரைக் கொடுத்து நடித்துள்ளார் என்றும், அவருக்கு இன்னொரு தேசிய விருது கிடைக்கும் என்றும் தமிழ் விமர்சகர்கள் கூறிவரும் நிலையில், இந்த படத்தின் ஹீரோ நான் தான் என்று நாகார்ஜுனா கூறியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



# நடிகர் ஸ்ரீகாந்துக்கு மருத்துவ பரிசோதனை



‘ரோஜா கூட்டம்’ என்ற படத்தின் மூலம் 2002ஆம் ஆண்டு கதாநாயகனாக அறிமுகமான நடிகர் ஸ்ரீகாந்த், தொடர்ந்து ஏப்ரல் மாதத்தில், மனசெல்லாம், பார்த்திபன் கனவு, நண்பன் போன்ற வெற்றி திரைப்படங்களில் நடித்தார்.

அண்மையில் இவரது நடிப்பில் தினசரி மற்றும் கொஞ்சம் காதல் கொஞ்சம் மோதல் திரைப்படங்கள் வெளியாகி மக்களிடையே கலவையான விமர்சனத்தைப் பெற்றது.

இந்தநிலையில், ஸ்ரீகாந்திற்கு போதைப்பொருள் விநியோகம் செய்ததாக வாக்கு மூலம் கொடுக்க அதன் அடிப்படையில் அவரிடம் விசாரணை நடத்தி அரசு மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது.

அத்துடன், அதன் முடிவுகள் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# விமல் திரைப்படம் பூஜையுடன் ஆரம்பம்

நடிகர் விமல் நாயகனாக நடிக்க, அறிமுக இரட்டை இயக்குநர்கள் எல்சன் எல்தோஸ் மற்றும் மனிஷ் கே தோப்பில் இயக்கத்தில், கிராமப்புற பின்னணியில் உருவாகும் புதிய நகைச்சுவை படம், பூஜையுடன் ஆரம்பித்துள்ளது.

அத்துடன், காரைக்குடியில், படக்குழுவினர் கலந்துகொள்ள எளிமையான பூஜையுடன் இப்படத்தின் படப்பிடிப்பு ஆரம்பமானது.

இப்படத்தில் கதாநாயகனாக விமல் மற்றும் கதாநாயகியாக முல்லை அரசி நடிக்க, ‘விடுதலை’ சேத்தன், ‘பருத்திவீரன்’ சரவணன் உட்பட மற்றும் பல முன்னணி நட்சத்திரங்கள் இணைந்து, நடித்து வருகிறார்கள். சிறியவர் முதல் பெரியவர்கள் வரை, குடும்பங்களோடு அனைவரும் கொண்டாடும் வகையில், ஒரு அசத்தலான காமெடி எண்டர்டெயினராக இப்படம் உருவாக உள்ளது.

பார்க்கிங் வெற்றிப்பட ஒளிப்பதிவாளர் ஜிஜு சன்னி ஒளிப்பதிவு செய்கிறார். இசையமைப்பாளர் ஜஸ்டின் பிரபாகரன் இசையமைக்கிறார்.

பிரான்சிஸ் நெல்சன் சேவியர் மற்றும்



மருது பெரியசாமி வசனம் எழுதியுள்ளனர்.

கிராமத்துப் பின்னணியை மையமாக வைத்து உருவாகும் இப்படத்தின் படப்பிடிப்பை, காரைக்குடி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில், ஒரே கட்டமாக நடத்தி முடிக்க, படக்குழு திட்டமிட்டுள்ளது.

இப்படத்தின் தலைப்பு மற்றும் ஃபர்ஸ்ட் லுக் குறித்த மற்ற தகவல்கள், விரைவில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் என தெரிகின்றது.



ரஷ்யா

ஈரானுக்கு அணு ஆயுதங்களை வழங்க

# தயாராகும் நாடுகள்

நாடுகள் தங்களுடைய அணு ஆயுதங்களை ஈரானுக்கு நேரடியாக வழங்க தயாராக உள்ளன என்று, ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதி மற்றும் அந்நாட்டின் பாதுகாப்பு கவுன்சிலின் துணை தலைவரான டிமிட்ரி மெத்வதேவ் தெரிவித்தார்.

அமெரிக்காவின் தாக்குதல் பற்றி மாஸ்கோ நகரில் செய்தியாளர்களிடம் பேசும்போதே இதனை தெரிவித்தார்.

மேலும் இது குறித்து அவர் கூறுகையில்,

அமெரிக்க இராணுவ நடவடிக்கை பெரிய அளவில் சாதனை படைக்க தவறி விட்டது என்று கூறியுள்ளார். அமெரிக்க தாக்குதலின் திறன் பற்றி கேள்வி எழுப்பிய அவர், ஈரானின் அணு சக்தி மையத்தின் முக்கிய உட்கட்டமைப்பு பாதிக்கப்படாதது போன்றும், சிறிய அளவிலேயே அது பாதிப்பு அடைந்தது போலவும் தெரிகிறது என்றார்.

அந்நாட்டில் அணு ஆயுதங்களுக்கான செறிவூட்டல் நிகழ்கிறது. எதிர்காலத்தில் அணு ஆயுதங்களின் உற்பத்தி ஈரானில் தொடரும் என்றே தற்போது நாம் கூற முடியும் என்றும் மெத்வதேவ் கூறியுள்ளார்.

தொடர்ந்து அவர், நாடுகள் தங்களுடைய அணு ஆயுதங்களை ஈரானுக்கு நேரடியாக வழங்கத் தயாராக உள்ளன என்றும் குறிப்பிட்டார். ஆனால், அவர் குறிப்பிட்ட நாடுகள் பற்றிய விவரங்களை வெளியிடவில்லை.

இந்தியா

இந்தியாவுக்கு செல்லும்

## அமெரிக்கர்களுக்கு எச்சரிக்கை



தொழில் உள்ளிட்ட தேவைகளுக்காக இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளும் அமெரிக்கர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என ட்ரம்ப் தலைமையிலான அரசு அறிவுறுத்தியுள்ளது.

இந்தியாவில் பாலியல் குற்றம் அதிகரித்து வருவது கவலை அளிக்கிறது.

சுற்றுலாத் தலங்கள், போக்குவரத்து மையங்கள், சந்தைகளைக் குறிவைத்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்துவதால், மிகவும் கவனமாக அமெரிக்கர்கள் இருக்கவேண்டும் என அமெரிக்க அரசு கூறியுள்ளது.

நக்சலைட்டுகள் ஆதிக்கம் செலுத்தும் மகாராஷ்டிர மாநிலத்தின் கிழக்கு, தெலுங்கானாவின் வடக்கு மற்றும் மேற்கு வங்காளத்தின் மேற்கு பகுதிகளுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும் என்றும், பயங்கரவாத தாக்குதல் அபாயம் இருப்பதால் மத்திய மற்றும் கிழக்கு இந்தியப் பகுதிகளுக்கும், காஷ்மீருக்கும், மணிப்பூருக்கும் செல்வதை அமெரிக்கர்கள் செல்வதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஈரான்

## அமெரிக்க தளங்களுக்கு ஈரான் குறி



மத்திய கிழக்கில் உள்ள முக்கிய அமெரிக்க இராணுவத் தளங்களை ஈரான் குறிவைத்துள்ளதாக, ஈரான் மதகுரு கொமேனியின் நெருங்கிய உதவியாளர் ஹொசைன் ஷரியத்மதர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

“ஈரானின் அணுசக்தி தளங்கள் மீது அமெரிக்கா அத்துமீறி தாக்குதல் நடத்தியுள்ளது. இதையடுத்து, சிறிதும் தாமதிக்காமல் உடனடியாக எதிர்த்தாக்குதல் நடத்த வியூகம் வகுக்கப்பட்டுள்ளது.

“அதன்படி மத்திய கிழக்கில் உள்ள முக்கிய அமெரிக்க இராணுவத் தளங்களை ஈரான் குறிவைத்துள்ளது. பஹ்ரைனில் உள்ள அமெரிக்க கடற்படையை தாக்கவும், பிரிட்டிஷ், ஜெர்மனி, பிரெஞ்சு மற்றும் அமெரிக்க கப்பல்களுக்கு ஹோர்முஸ் ஜலசந்தியை மூடவும் ஈரானிய படைகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது” என்றார்.

ஈரான்



## ‘தவறுக்கான தண்டனை தொடரும்’

அமெரிக்கா தாக்குதல் நடத்தியுள்ள நிலையில், இஸ்ரேல் பெரிய தவறு செய்து விட்டது, தவறுக்கான தண்டனை தொடரும் என்று ஈரானின் உச்சபட்ச தலைவர் காமேனி தெரிவித்துள்ளார்.

ஈரானின் 3 அணுசக்தி நிலையங்களை அமெரிக்கா தாக்கிய பின் முதல் முறையாக கருத்து கூறியுள்ள ஈரானின் உச்சபட்ச தலைவர், எந்த இடத்திலும் அமெரிக்காவைப் பற்றியோ, அதன் தாக்குதலை பற்றியோ தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

இஸ்ரேல்

ஈரானின்

## விமான நிலையங்கள் மீது தாக்குதல்

ஈரானில் உள்ள மெராபாத், மஷாத் மற்றும் டெஸ்ஃபுல் உட்பட 6 விமான நிலையங்கள், 15 ஈரானிய விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்களை அழித்துள்ளதாக, இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல்கள் மூலம் ஈரானில் உள்ள விமான ஓடுபாதைகள், நிலத்தடி பதுங்கு குழிகள், எரிபொருள் நிரப்பும் விமானம் மற்றும் எஃப்-14, எஃப்-5 மற்றும் ஏஹெச்-1 உள்ளிட்ட விமானங்கள் கடும் சேதமடைந்தன. இந்த விமான நிலையங்களின் இயங்கும் திறனை எங்கள் விமானப்படை சீர்குலைத்தது எனவும், இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.



இங்கிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# 96 ஓட்டங்கள் முன்னிலையில் இந்தியா



இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்டில் 96 ஓட்டங்கள் முன்னிலையில் இந்தியா காணப்படுகின்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில் லீட்ஸில் வெள்ளிக்கிழமை (20) ஆரம்பித்த இப்போட்டியின் மூன்றாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 3 விக்கெட்டுகளை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இங்கிலாந்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 465 ஓட்டங்களைப் பெற்றது. ஒலி போப் 106, ஹரி ப்றூக் 99, ஜேமி ஸ்மித் 40, கிறிஸ் வோக்ஸ் 38, பிறைடன் கார்ஸ் 22, ஜொஷ் டொங்க் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில் ஜஸ்பிரிட் பும்ரா 5, பிரசீத் கிருஷ்ணா 3, மொஹமட் சிராஜ் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலுக்கு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடும் இந்தியா மூன்றாம் நாள் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் லோகேஷ் ராகுல் 47 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் ஷுப்மன் கில் ஆறு ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர். முன்னதாக சாய் சுதர்ஷன் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தார். பந்துவீச்சில் பிறைடன் கார்ஸ், அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இலங்கைக்கு எதிரான தொடருக்கான

## பங்களாதேஷ் குழாமில் லிட்டன் தாஸ்



இலங்கைக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான பங்களாதேஷ் குழாமில் லிட்டன் தாஸ் இடம்பெற்றுள்ளார்.

லிட்டன் தவிர மொஹமட் நைம், ஹஸன் மஹ்மூட் ஆகியோரும் குழாமுக்கு மீளத் திரும்பியுள்ளனர்.

இதேவேளை, சௌமியா சர்கார் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: மெஹிடி ஹஸன் மிராஸ் (அணித்தலைவர்), தன்ஸிட் ஹஸன், பார்வேஸ் ஹொஸைன் எமோன், மொஹமட் நைம், நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ, தௌஹிட் ஹிரிடோய், லிட்டன் தாஸ், ஜாகிர் அலி, ஷமிம் ஹொஸைன், ரிஷாட் ஹொஸைன், தன்விர் இஸ்லாம், முஸ்தபிசூர் ரஹ்மான், தன்ஸிம் ஹஸன், தஸ்கின் அஹ்மட், நஹிட் ரானா, ஹஸன் மஹ்மூட்.




## அணித்தலைமைப் பதவியிலிருந்து விலகும் ஷன்டோ

இலங்கைக்கெதிரான டெஸ்ட் தொடரைத் தொடர்ந்து அணித்தலைவராக பங்களாதேஷின் டெஸ்ட் போட்டிகளுக்கான அணித்தலைவர் நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ தொடர மாட்டாரெனத் தெரிகிறது.

தனது முடிவை பங்களாதேஷ் கிரிக்கெட் சபைக்கு ஷன்டோ விரைவில் அறிவிக்கவுள்ளதுடன், அதைத் தொடர்ந்து நடைபெறவுள்ள கலந்துரையாடலையடுத்தே இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் முடிவில் உத்தியோகபூர்வமாக முடிவை அறிவிப்பதா அல்லது பின்னரா என ஷன்டோ முடிவெடுக்கவுள்ளார்.

அண்மையில் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுகான அணித்தலைமைப் பதவியை கிரிக்கெட் சபை பறித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மொனாக்கோவில் இணையும் பொக்பா




பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான மொனாக்கோவில் இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸின் மத்தியகளவீரரான போல் பொக்பா இணையவுள்ளதாகக் கூறப்படுகிறது.

சவூதி அரேபியக் கழக ஒப்பந்தத்தை நிராகரித்த 32 வயதான பொக்பா, மொனாக்கோஉடன் இரண்டாண்டு ஒப்பந்தமொன்றுக்கு இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.




## மிலனிலிருந்து வெளியேறும் ஹெர்ணாண்டஸ்

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஏ.சி. மிலனின் பின்களவீரரான தியோ ஹெர்ணாண்டஸைக் கைச்சாத்திடுவதற்கான ஒப்பந்தத்தை இறுதிப்படுத்துவது நோக்கி சவூதி அரேபியக் கழகமான அல் ஹிலால் நகர்வதாகக் கூறப்படுகிறது.

மிலனுடன் 2026ஆம் ஆண்டு வரையில் ஒப்பந்தத்தை 27 வயதான தியோ ஹெர்ணாண்டஸ் கொண்டிருக்கிறார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 24, ஜூன் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.